தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (13.08.2025) போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரசு விரைவுப் போக்குவரத்து கழகத்தில் பணிக்காலத்தில் மறைந்த பணியாளர்களின் 2 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின் போது, போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, அரசு விரைவுப் போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர் இரா.மோகன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி திருவெண்ணெய்நல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 4வது பட்டமளிப்பு விழாவில் மாணவ – மாணவிகளுக்கு கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர். க.பொன்முடி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பட்டங்களை வழங்கினார். உடன் திருவள்ளுவர் பல்கலைக்கழக தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் பாபு ஜீவனாந்தம், கல்லூரி முதல்வர் இந்திரா, ஒன்றியக் கழகச் செயலாளர் பி.வி.ஆர். சு.விசுவநாதன், நகரச் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றியக் குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், பேரூராட்சி மன்றத் தலைவர் அஞ்சுகம் கணேசன், ஊராட்சி மன்றத் தலைவர் கௌரி கோவிந்தராஜ், ஒன்றிய கவுன்சிலர் ஏழுமலை மற்றும் பேராசிரியர்கள், துணை பேராசிரியர்கள், மாணவ – மாணவிகள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பத்திரிகையாளர் நல வாரியத்தின் ஒன்பதாவது கூட்டம்!

சென்னை, ஆக. 15 - தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நேற்று (14.08.2025) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் பத்திரிகையாளர் நல வாரியத்தின் ஒன்பதாவது கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பத்திரிகையாளர் ஓய்வூதியம் கோரி வரப்பெற்ற 42 விண்ணப்பங்களும், பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி கோரி வரப்பெற்ற 8 விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்பட்டு அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டன.

மேலும் இக்கூட்டத்தில் 3.9.2024 முதல் 15.06.2025 வரையிலான காலத்தில் 29 பத்திரிகையாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கு உதவித்தொகையாக ரூ. 3,83,500/ (ரூபாய் மூன்று இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து ஐநூறு மட்டும்) வழங்கப்பட்டதற்கு நலவாரியத்தின் குழு ஒப்புதல் பெறப்பட்டது.

பத்திரிக்கையாளர் நல வாரியத்தின் மூலம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகை, இயற்கை மரண உதவித்தொகை, ஈமசடங்கு உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவித்தொகைகள் மற்றும் புதிய உறுப்பினர் சேர்க்கை குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் வே. ராஜாராமன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர் கொ.வீர ராகவ ராவ், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை இணைச் செயலாளர் கே.எம். சரயு, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் ச.செல்வராஜ், முனைவர் இரா. பாஸ்கரன், பத்திரிகையாளர் நல வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்கள் சிவந்தி ஆதித்யன் பாலசுப்பிர மணியன், ஆர்.எம். ஆர் ரமேஷ், நக்கீரன் கோபால், பி.கோலப்பன், திருமதி லெட்சுமி சுப்பிரமணியன், தம்பி தமிழரசன், எஸ். கவாஸ்கர், எம். ரமேஷ், திருமதி டி. தமிழரசி மற்றும் அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் செய்தித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திண்டிவனத்தில் ரூ.2.03 கோடி மதிப்பீட்டில்

புதிய சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம்!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணியைத் தொடங்கி வைத்தார்!

திண்டிவனம் ஆக 15- விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் சார் பதிவாளர் அலுவலக கட்டிடம் கட்ட வேண்டும் என பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர் . இதை அடுத்து வணிகவரி மற்றும் பத்திர பதிவுத் துறை சார்பில் திண்டிவனம் தாலுகா அலுவலகம் அருகில் இணை எண் 2 சார் பதிவாளர் அலுவலகம் கட்டிடம் கட்டுவதற்கு பூமி பூஜை விழா இன்று காலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ரூபாய் 2 கோடியே மூன்று லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இணை எண் 2 சார் பதிவாளர் அலுவலகம் கட்டிடம் கட்டுவதற்கு பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட பொருளாளர் ரமணன், நகர மன்றத் தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன், மயிலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் மணிமாறன், பொதுப்பணித்துறை உதவிப் பொறியாளர்கள் விமலா, ஜெயபால், சார் பதிவாளர்கள் கேசவன், முரளி உள்ளிட்ட நகர மன்ற உறுப்பினர்கள் நகர நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சோழிங்கநல்லூரில் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. ரேஷன் பொருட்கள் வழங்கினார்

சென்னை, ஆக. 15- முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை தண்டையார் பேட்டையில் துவக்கி வைத்ததை தொடர்ந்து, சோழிங்க நல்லூர் தொகுதி 196 -வது வார்டு கண்ணகி நகரில் 'முதலமைச்சரின் தாயுமானவர்' திட்டத்தை ச. அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. பல்வேறு கடைகளில் 70 வயதிற்கு மேற்பட்டோர் - மாற்றுத் திறனாளிகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கி, அங்கு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்தார்.

உடன் வட்டச் செயலாளர் சீனிவாசன் உள்ளிட்ட வட்டக் கழக நிர்வாகிகள், உணவுப் பொருள் துணை ஆணையாளர் திருமதி. லட்சுமி, துணைப் பதிவாளர் ஜெயராமன், மேலாளர் மகேந்திரன், நியாய விலைக் கடை விற்பனை யாளர்கள் என்.லட்சுமணன், பி.கே.பிரபு, வினாயகம் உள்ளிட்ட கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்

ஆஸ்திரேலிய மெல்பேர்னில் பெரியார் அம்பேத்கார் சிந்தனை வட்டம் (PATCA), தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நல வாரியத்துடன் (NRTWB) இணைந்து, 2025 ஆகஸ்ட் 10, ஞாயிற்றுக்கிழமையன்று மெல்பேர்னில் ஒரு உற்சாகமளிக்கும் நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சியில் NRTWBஇன் தலைவர், கழக சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு வாரியத்தின் பல்வேறு ஆதரவு முயற்சிகளை விரிவாக விளக்கி உரையாற்றினார். PATCAஇன் தலைவர் டாக்டர். அண்ணாமலை மகிழ்நன், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அரங்க.மூர்த்தி, சுரேஷ், ராதிகா, பொருளாளர் திருமலை நம்பி, உறுப்பினர்கள் வசந்தகுமார், இளையமதி, சரவணன் உள்பட 150க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள், சமூகத் தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் தமிழ் புலம்பெயர் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கருநாடக மாநில தி.மு.க. சார்பில்

முரசொலி மாறன் பிறந்த நாள் நிகழ்ச்சி!

கருநாடக மாநிலக் கழக அமைப்பாளர் ந.இராமசாமி அறிக்கை!

பெங்களூரு, ஆக. 15- கருநாடக மாநில தி.மு.க சார்பில் மறைந்த மத்திய முன்னாள் அமைச்சரும், கலைஞரின் மனசாட்சியாக விளங்கி கழகத்தைக் காத்த முரசொலி மாறன் அவர்களின் 92-வது ஆண்டு பிறந்த நாள் நிகழ்ச்சி 18-08-2025, திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கருநாடக மாநில தி.மு.க. கலைஞரக வளாகம், தளபதி மு.க. ஸ்டாலின் மணிவிழா அரங்கத்தில் உள்ள முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாநில தி.மு.க. நிர்வாகிகள், முன்னாள் மாநில தி.மு.க நிர்வாகிகள், தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள், இளைஞரணி நிர்வாகிகள், தி.மு.க. இலக்கிய அணி நிர்வாகிகள், மகளிரணி நிர்வாகிகள், தொ.மு.ச. பேரவை நிர்வாகிகள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி உரையாற்றுவர்.

நிகழ்ச்சியில் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ந.இராமசாமி அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருவாரூர் மாவட்டக் கழக மாநில,

மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் - தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் சந்திப்பு!

மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் மருத்துவர் அழகு ராஜா நிர்வாகிகளுடன் பங்கேற்பு!

திருவாரூர், ஆக. 15 - தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணிக்கு மாநில துணை செயலாளராக, கழக தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களால், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துக்களோடு நியமிக்கப்பட்டிருக்கும் மருத்துவர் அழகு ராஜா, கழக நிர்வாகிகளையும், மூத்த முன்னோடிகளையும் மரியாதை நிமித்தம் சந்தித்து ஆலோசனை நடத்தி வருகிறார்.

கழகத்தின் மற்றுமொரு கேடயமாக திகழும் கழக தகவல் தொழில் நுட்ப அணி, சமூக வலைதளங்களில் கழக அரசின் சாதனைகளை உடனுக்குடன் எடுத்து செல்வதிலும், கழகத்தின் மீது அவதூறு பரப்புவோர்களுக்கு புள்ளி விபரங்களோடு உடனுக்குடன் உரிய பதிலையும் கொடுத்துவருவது உள்ளிட்ட பணிகளை சிறப்புடன் செய்துவருகிறது.

இந்த நிலையில் தகவல் தொழில்நுட்ப அணியினை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் அணியின் மாநில செயலாளர், தமிழ்நாடு அரசின் தொழில் துறை அமைச்சர் முனைவர் டி. ஆர்.பி.ராஜா அவர்களோடு, ஏனைய நிர்வாகிகளுடன் இணைந்து பணியாற்றும் வகையில் மருத்துவர் அழகு ராஜா அவர்களை அணியின் மாநில துணை செயலாளராக தலைமைக் கழகம் நியமித்து இருக்கிறது.

முதல்வர், திராவிட நாயகர், கழக தலைவர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகளையும், தொழில் துறை அமைச்சர், மாநில செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களையும் சந்தித்து வாழ்த்துபெற்ற மருத்துவர் அழகு ராஜா, மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தொழில் துறை அமைச்சர் அணியின் மாநில செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர்களின் ஆலோசனைக மாவட்ட, ஒன்றிய, நகர, லின்படி, திருவாரூர் பேரூர் நிர்வாகி களையும், மாவட்டக் கழக மாநில, தகவல் தொழில் நுட்ப அணி உள்ளிட்ட சார்பு அணிகளின் நிர்வாகி களையும், கழக மூத்த முன்னோடி களையும், கழகத்தின் வேர்களாம் முன்னணி தொண்டர்களையும் அவர்களது இல்லங்களுக்கே சென்று சந்தித்து ஆலோசனைகள் நடத்தி, வாழ்த்து பெற்றுவருகிறார்.

உத்திரமேரூர் ஒன்றியத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

க.சுந்தர் எம்.எல்.ஏ. மனுக்கள் பெற்று – நல உதவிகள் வழங்கினார்!

காஞ்சிபுரம், ஆக. 15 - காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம் மருத்துவான்பாடி கிராமத்தில் 'உங்களுடன் ஸ்டாலின் முகாம்' நடைபெற்றது இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றார் மேலும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் ஒன்றிய செயலாளர் கெ. ஞானசேகரன், பேரூர் செயலாளர் பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் சசிகுமார், ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன், வீரம்மாள் மாயகிருஷ்ணன், ஒன்றிய நிர்வாகிகள் ருத்ர கோட்டி, தாமஸ், ஆதிநாராயணன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கம்மராசபுரம் கே.எம்.இராஜகோபால்

ஆகஸ்ட் 15 (1980)

தனது 16வது வயதிலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து, தொடர்ந்து அண்ணாவின் தலைமையை ஏற்று கழகத்தில் தீவிரமாக பணியாற்றி தமிழகமெங்கும் சுற்றி மூடநம்பிக்கை எதிர்ப்பு பிரச்சாரம் செய்தவர்.

அண்ணாவின் 'நீதிதேவன் மயக்கம்' நாடகத்தில் இராவணன் வேடமேற்று நடித்தவர்.

உழவர் குத்தகை உரிமை – இந்தி எதிர்ப்பு – சட்ட எரிப்பு – விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் களம் புகுந்து சிறை சென்றவர்.

1965ல் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் – 1976ல் மிசா சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும் – காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் – கம்மராசபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக மறையும் வரை தொடர்ந்து பொறுப்பில் இருந்தவர்.

காஞ்சிபுரம் வட்டக் கிளைச் செயலாளர் – செங்கல்பட்டு மாவட்ட செயற்குழு உறுப்பினர் – தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தி.மு.க. வர்த்தகர் அணி

மாவட்ட, மாநில அமைப்பாளர் - தலைவர்கள் கூட்டம்!

தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் - தலைவர்கள் கூட்டம் 24-8-2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில், கிருஷ்ணகிரி, "தேவராஜ் மகாலில்" எனது தலைமையில் கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா, எம்.பி., அவர்கள் சிறப்புரையாற்றுகிறார். வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், எஸ்.மோகன் - வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் மாலைராஜா, வி.ஜெயன், கோவை நா. முருகவேல், பி.டி. பாண்டிச்செல்வம், எஸ்.முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர் - வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஜ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த. வனராஜ், வி.பி. மணி, இ.ராமர், க. தனசெல்வம், பெ. சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ். ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ.சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ்.சீனிவாசன், கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட மற்றும் மாநில அமைப்பாளர்கள் - தலைவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் வர்த்தகர் அணி பட்டியல் பெறுதல் மற்றும் கழக அணி வளர்ச்சி குறித்து.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018

காசி முத்துமாணிக்கம்,
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி 176 வது வார்டுக்குட்பட்ட கங்கை நகர் பகுதியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை பயனாளிகளின் இல்லத்திற்கு சென்று சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் மற்றும் 176 வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி வே.ஆனந்தம் பொருட்களை வழங்கினார் உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.